தொகுதி 1
சித்திரம் 1


பொன்னிவளநாட்டின்
வீர சரித்திரம்



# காராளர் தோற்றம்

www.ponnivala.com

© 2012 Ponnivala Publishing



பகுதி 1 சித்திரம்-01

## காராளர் தோற்றம்

பார்வதிதேவி பூமியில் காராளர்களை தோற்றுவித்தார். சோழமன்னன் அவர்களின் வாழ்வாதாரத்திற்கு விவசாய பூமியான பொன்னிவளநாட்டை கொடையாக அளித்து உதவினார். விஷ்ணு அவர்களுக்கு உறுதுணையாக நின்று, அவர்களின் சந்ததிகள் பெருக அருள் புரிந்தார். மூத்தகாராளன் தான் அறியாமல் பசுக்களுக்கு இழைத்த அநீதியினால் ஏழுதலைமுறைக்கும் குழந்தையில்லா கொடுஞ்சாபத்தை பெற்றார். இந்த காராளவம்சத்தின் கதையை உடுக்கை பாடகர்கள் வழிவழியாக பல தலைமுறைகளுக்கும் பாடி புகழ் பரப்புகின்றனர்.

மறுவர்ணணை
பிரெண்டா பெக். இ
கசாண்ரா கொர்நால்


தமிழாக்கம்
சிவசங்கர் நவரட்ணம்
சத்தியபாமா


சித்திரங்கள்
ரவிசந்திரன & குழு

வடிவமைப்பு
பிரியா கோவிந்தராஜன்
ஸ்டெப்பான் ஹானிஹன்

ஓப்பச்சர்
முலர்விழி ராஜ்


வெளியீட்டாளர்
பொன்னிவளா
பப்ளிகேசன்
© 2012
சாப்ட்சைன்ஸ்
அசோசியேசன் லிமிடட்.


வாங்க! வாங்க! மூனுதலைமுறை காராளவம்ச கதையை உங்களுக்கு சொல்ல போறேன்.
இது நம் காலத்தில் நடந்ததல்ல, தென்னிந்தியாவில் சோழமன்னர் ஆண்ட காலத்தில் நடந்தது.
பசுமை நிறைந்த காவேரி ஆற்றங்கரையில் உள்ள செழிப்பு மிக்க பொன்னிவளநாட்டின் கதை இது.



இந்தக் கதையை சொல்வதற்கு முன்னால், முழுமுதற் கடவுளான கணபதியையும், சரஸ்வதியையும் என்னை ஆசீர்வதித்து அருளுமாறு வேண்டுகிறேன்.
கதைனா எனக்கு ரொம்ப புடிக்கும் சொல்லுங்க! சொல்லுங்க!
இந்த பகுதியில் இவங்கதான் நல்லா கத சொல்ற பாட்டுக்காரங்க!


கைலாயத்தில் ஒரு நாள் சிவனும், பார்வதியும் பூலோகத்தின் அழகினை கண்டு ரசித்துக்கொண்டு இருந்தனர்.
அங்கே பார் என்ன ஒரு அழகான வனம்!
சலசல...
குர்க், குர்க்
குர்க், குர்க்
ஆனால்! நாதா! எந்த ஒரு விவசாயபூமியும் தென்படவில்லையே!
நான் இந்த அழகான பூமியை மேலும் அழகாக்க விரும்புகிறேன்.


பார்வதிதேவி அடர்ந்த கானகங்களை பார்த்து அதை விவசாய செழிக்கும் பூமியாக மாற்ற விரும்பினார்.
பூமி எங்கு அடந்த காடுகளே நிறைந்துள்ளன. பசுமையுடன் பூக்களும் காய்களுமாக விளைந்து நிற்கின்ற விவசாய நிலங்களை காணமுடியவில்லை. அந்த குறையை போக்க நான் ஒன்பது காராள சகோதரர்களை உருவாக்கப்போகிறேன்.
அவர்கள் இந்த அழகான பூமியை எல்லாப்பருவத்திலும் பசுமையாக வைத்திருப்பார்கள்.
சரி!
இதுவே உன் விருப்பம் என்றால் அப்படியே செய்.


பார்வதிதேவி தன் சக்தியினால் ஒன்பது காராளர்களை உருவாக்கினார்.
விஸ்ஸ்ஸ்க்
அவர்களை விநாயகர் கோவிலின் முன் தோன்றச் செய்தார்.
டஸ்க
ஷ்ஷ்ஷ்
நான் உங்களை எங்கும் காடுகள் சூழ்ந்த நிலத்தில் தோற்றுவித்திருக்கிறேன்.
இந்த காடுகளை சுத்தப்படுத்தி, அதை விவசாயம் செய்வதற்கு ஏற்ற நிலமாக பயன்படுத்தி, எங்கும் பயிர் பச்சைகளை நட்டு அவை பூத்து காய்த்து குழுங்கி அழகுடன் காட்சி தரும்படி செய்யுங்கள்.


பராசக்தி செழிப்பான விவசாய நிலங்களை உருவாக்க சொல்லி நம்மை பணித்துள்ளார்.
நிலத்தை தயார்படுத்தி செழிப்பான விவசாய பூமியாக மாற்றி அவர் வாக்கை காப்பாற்றுவது நமது கடமையாகும்.
எங்க பார்த்தாலும் ஒரே காடாக இருக்கே? இதுல எங்கிருந்து ஆரம்பிக்கிறது?



தாங்கள் வாசிப்பதற்கான இருப்பிடங்களை அமைக்க தொடங்கினர்.
ஏய்! இங்கே ஒரு மூங்கிலை கொடு!
பார்வதிதேவி கூறியது போல் செழிப்பான நிலத்தை உருவாக்க கடுமையாக உழைத்தனர்.


லோகமாதா, காராளர்கள் இல்வாழ்கையில் ஈடுபட்டு, அவர்களின் வம்சங்கள் வாழையடி வாழையாக விருத்தியடைவதற்காக அவர்களுக்கு திருமணம் செய்து வைக்க எண்ணி ஒன்பது பெண்களை வாளவந்தியில் படைத்தார்.
அவர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் மணமுடித்துக் கொண்டனர்.



காராளர்கள் லோகமாதாவின் விருப்பத்துக்கு ஏற்றாற் போல் கடுமையாக உழைத்து, செழிப்பான விவசாய நிலங்களை உருவாக்கினர். தாங்கள் வேலைகளை மனநிறைவுடன் செய்தனர். அத்தோடு ஒன்பது சகோதரர்களுக்கும் திருமணம் நடந்து, குடும்ப வாழ்க்கையை சந்தோசமாக தொடங்கினர்.







சிறிது காலத்திற்கு பின்பு மழை இல்லாமல் எங்கும் வறட்சி ஏற்பட்டு, உண்ண உணவின்றி, கடும்பஞ்சம் நிலவியது. இதனால் மூத்தசகோதரன் கோலாத்தா மனமுடைந்து போனார்.





நாதா! இவ்வளவு காலமாக மழையும் இல்லை. அதனால் விளைச்சலும் இல்லை. உண்ண உணவும் இல்லை. இப்படியே இருந்தால் நாம் என்ன செய்வது.
அரியநாச்சி! என்னை என்ன செய்யச் சொல்கிறாய் மழை இல்லாததிற்கு?
நாம் சோழ மன்னரிடம் செல்வோம். அவர் நமக்கு ஏதாவது உதவி செய்வார்!
சரி! இப்பொழுதே சோழதேசம் நோக்கி புறப்படுவோம்.
கோலாத்தாகவுண்டரும் அவர் மனைவி அரியநாச்சியும் சோழமன்னரை சந்திக்க அரண்மனையை நோக்கிச் சென்றனர்.


சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் மூவரும் ஒன்றாக அமர்ந்திருந்தனர்.
மங்களம் உண்டாகட்டும்! எங்கேயிருந்து வருகிறீர்கள்?
மன்னா! என் பெயர் கோலாத்தா! நான் வெள்ளிவளநாட்டிலிருந்து வருகிறேன்.
எங்கள் நிலங்கள் அனைத்தும் மழையின்றி வறண்டுவிட்டது. அதனால், விவசாயம் செய்ய முடியவில்லை.
என்ன கொடுமையிது!
எங்களுக்கு இன்றுவரை வெள்ளிவளநாட்டில் விவசாயிகள் இருப்பது பற்றி தெரியாது.
நீங்கள் விரும்பினாள் இங்கேயே தங்கி வேலை செய்யலாம். ஒரு மாதத்திற்கு இருபது வள்ளத்தானியம் கூலியாகத்தருகிறேன்.
மிக்க நன்றி மன்னா!



கோலாத்தாவுக்கு வேலை கிடைத்திருந்தாலும் அவருடைய சகோதரர்கள் வெள்ளிவளாவில் பட்டினியால் வாடுகின்றனர். அவர்களுக்கு, அவர்களுடைய அண்ணன் எங்கு சென்றார் என்றே தெரியவில்லை.
நமது அண்ணனிடமிருந்து எந்தவொரு தகவலும் வரவில்லையே!
ஒரு வேலை சோழ மன்னர் அரண்மனைக்கு வேலை தேடிச்சென்றிருப்பாரோ?
வாருங்கள் நாம் சென்று அவரைத்தேடலாம்.
ஆம் நானும் கேள்விப்பட்டேன்.
மங்களம் உண்டாகட்டும் அப்பா! யார் நீங்கள்?
மன்னா! நாங்கள் வெள்ளிவள நாட்டைச்சேர்ந்த விவசாயிகள். எங்களது நிலம் வறட்சியடைந்து விட்டது நாங்கள் வறுமையில் வாடுகிறோம்.
எங்கள் அண்ணன் கோலாத்தா எங்களை விட்டு சென்றுவிட்டார்.
அவர் ஒருவேளை இங்கே வந்திருப்பாரோ என்று பார்க்க வந்தோம்.


கோலாத்தா உங்கள் அண்ணனா? அவர் இங்கேதான் இருக்கிறார்...
சேவகா! கோலாத்தாவை அழைத்து வா!
கோலாத்தா இவர்கள் அனைவரும் உன் தம்பிகளா?
ஆம்! நாங்கள் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.
நல்லது! நீங்களும் இங்கேயே தங்கி வேலை செய்வதற்கு விரும்புகிறீர்களா?
உங்கள் அண்ணனுக்கு கொடுத்தது போலவே, உங்களுக்கும் மாதம் இருபது வள்ளத்தானியம் தருகிறேன்.
ஆம் மன்னா!
மிக்க நன்றி!


நாட்களும் கழிந்தன, சோழநாடு முழுவதும் நல்ல மழை பொழிந்து, மன்னரின் நிலங்கள் செழிப்படைந்தன.
சகோதரர்கள் கடுமையாக உழைப்பதைக் கண்ட சோழமன்னன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான்.
எங்கும் பசுமை நிறைந்த நிலங்களை பார்ப்பதற்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது.


அந்த விவசாயிகள் வந்த பின்புதான் நம் நிலங்கள் செழிப்படைந்து.
அவர்கள் கடுமையான உழைப்பாளிகள்.
அவர்களின் உழைப்பிற்கு நான் தக்க பரிசு வழங்க வேண்டும்.
அவர்களுக்கு நான் இந்த பொன்னிவள நாட்டை பரிசாகத் தரப்போகிறேன்.
நல்லது! ஆனால்? அங்கே வாழும் ஆசாரிகளிடம் இதை எப்படி நாம் செல்வது?
ஆசாரிகளை அழைத்து நாம் பேசினால் இந்த பிரச்சினைக்கு தீர்வு காணலாம்.




அரசவைக்கு இருதரப்பினரும் அழைக்கப்பட்டனர்.
அனைவரும் வந்தனம்! இங்கே இருக்கும் விவசாயிகள் மிகுந்த திறமைசாலிகள்.
இவர்களால் தான் நம் நிலங்கள் செழிப்படைந்தன.
ஆசாரிகளே! நீங்கள் வேறு வகையான திறமைகளைக் கொண்டவர்கள் உங்களுக்கு நகைகள், மரவேலை, சிற்பம் போன்றவை செய்யத்தெரியும்.
உங்களுக்கு ஈடு இணையில்லை. ஆனால் உங்கள் திறமை வேறு, விவசாயிகளின் திறமை வேறு.
பொன்னிவளநாட்டின் பிரதான தொழில் விவசாயமாகும். ஆகவே இந்த பூமியை விவசாயிகளுக்கு தானமாக கொடுக்க நினைத்திருக்கிறேன்.
உங்களுக்கு வேண்டிய நெல், காய்கறி,பழவகைகளை அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
இல்லை மன்னா!


நாங்கள் பொன்னிவளநாட்டில் காலங்காலமாக வாழ்ந்து வருகிறோம்.
இது நாங்கள் பிறந்தமண் இதை யாருக்கும் விட்டுக்கொடுக்க மாட்டோம்!
வாக்குவாதங்கள் நாள் கணக்கில் தொடர்ந்தது. முடிவாக சோழமன்னன் அரண்மனையை விட்டு வெளியேறிச் சென்று விஷ்ணுவை உதவிக்கு அழைத்தார்.
மகாவிஷ்ணுவே!
இந்த இக்கட்டான நிலையில் சரியான முடிவை எடுக்க தங்களின் உதவி தேவை.
விஷ்ணு அதைக்கேட்டு ...
உதவ விரைந்து வந்தார்!
உஷ்ஷ்ஷ்



நன்மை உண்டாகட்டும்! மன்னா! எதற்காக என்னை அழைத்தாய்?
காலங்காலமாக ஆசாரிகள் பொன்னிவளநாட்டில் வாழ்கின்றனர்.
ஆனால் வெள்ளிவளநாட்டு விவசாயிகள், தற்பொழுது இங்கே வந்துள்ளனர்.
உம்ம்....
எனக்கு புரிகிறது!
இந்த விவசாயிகளால் தான் எங்கள் நிலங்கள் செழிப்படைந்தது. அதனால், அவர்களுக்கே இந்த நாட்டை கொடுக்க முடிவு செய்தேன். ஆனால்...
ஆசாரிகள் இதற்கு ஒப்புக்கொள்ளவில்லை!
இதற்கு நான் தீர்வு கூறுகிறேன். நாளை பொன்னிவள நாட்டிலுள்ள காவேரியாற்றங்கரையில் விழாவிற்கு ஏற்பாடு செய்யுங்கள்.
அங்கே ஆசாரிகளையும், விவசாயிகளையும் ஒன்று கூடச்சொல்லுங்கள்.


விஷ்ணு கூறியபடி அனைவரும் அங்கே கூடினர்...
கடவுளே! விஷ்ணு!
விஷ்ணு! விஷ்ணு!
மங்களம் உண்டாகட்டும் ஆசாரிகளே!
சோழமன்னர் பொன்னிவள நாட்டை விவசாயிகளுக்கு கொடுக்க உத்தேசித்துள்ளார்.
அதற்கு நீங்கள் ஒப்புக் கொள்ளவில்லை?
கடவுளே! எங்களுக்கு செந்தமான பூமியை யாருக்கும் கொடுக்கமாட்டோம்.
சரி நான் ஒரு போட்டி வைக்கிறேன், அது உங்களுக்கு சரியான தீர்வைத்தரும். நான் விவசாயிகளின் மூத்தவரை...
நிலத்தின் அடியில் இருந்து எழச்செய்வேன். உங்களில் ஒருவர் அவரின் தலையை ஒரே வீச்சில் வாளை வீசி வெட்ட வேண்டும். இதில் நீங்கள் வென்றால் நிலம் உங்களுக்கு, இல்லையேல் நிலம் விவசாயிகளுக்கு சொந்தமாகிவிடும்.



ஆசாரிகளும், விவசாயிகளும் விஷ்ணுவின் நிபந்தனைகளை ஒப்புக் கொண்டு போட்டிக்கு தயாராகினர். ஆசாரிகளில் இருந்து சிலரை தேர்ந்தெடுத்து தயாராக நிறுத்திய விஷ்ணு கோலாத்தாவை நிலத்தின் அடியில் இருந்து தோன்றச் செய்தார்.
விஷ்ணு என்ன நினைக்கின்றார் என்று தெரியவில்லை?
ஆ! இது கடினம்.
எதுவாக இருந்தாலும். அவருடைய வார்த்தையைப் பின்பற்ற வேண்டும். அதுதான் எல்லோருக்கும் நல்லது.
விஷ்ணு கோலாத்தாவை நிலத்திலிருந்து எழச்செய்தார்.ஆசாரிகள் கத்தியை கோலாத்தாவின் தலையை நோக்கி வீசினார்கள்.
விஸ்க் விஸ்க்
விஸ்க் விஸ்க்
விஸ்க் விஸ்க்
ஆனால் கேலாத்தாவின் அருகில் சென்ற கத்திகள் மாயமாக மறைந்தன. அதனால், ஆசாரிகள் தோற்று விட்டனர்.


ஆசாரிகளே! நீங்கள் ஒப்புக்கொண்டதின்படி தோற்றதாக உறுதி செய்கிறேன். பொன்னிவள நாடு இனி விவசாயிகளுக்கே சொந்தம்.
நீங்கள் உழுவதற்குப் பயன்பத்தும் கலப்பைகளை செய்து கொடுக்க வேண்டும். அதற்கு கூலியாக காராளர்கள் நான்கு வள்ளத் தானியம் தருவார்கள்.
இது உங்கள் குடும்பத்திற்குப் போதவில்லையெனில். .
விளைச்சலில் மூன்று வள்ளத் தானியம் அதிகமாக வாங்கிக் கொள்ளலாம். ஆசாரிக்குக் கொடுப்பதை காராளர்கள் வழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.
தாங்கள் அனைத்தும் அறிந்தவர். தங்களின் வார்த்தையை மதிக்கிறோம்.
இத்தோடு பிரச்சனை தீர்ந்தது. மங்களம் உண்டாகட்டும்!



பொன்னிவளநாடு விவசாயிகளின் மூத்தவரான கோலாத்தாவுக்கு வழங்கப்பட்டது.
கோலாத்தா! பொன்னிவளநாட்டை பார்த்துக்கொள்.
அங்குள்ள செல்லாத்தாளுக்கு மூன்று காலமும் பூஜை செய்து வழிபட்டு வா. அவள் உன்னை காத்தருள்வாள்.
நீங்கள் சொல்வது போல் செய்கிறோம்.
அவருடைய தம்பிகளுக்கு தங்கவளநாடு கொடுக்கப்பட்டது.
இரு ஊர்களுக்கும் இடையே எல்லைக்கல் நாட்டி வைக்கப்பட்டது.
கீ கீ கீ
கீ
கீ கீ
கோலாத்தா, சோழமன்னன் கூறியது போல், நாளைக்கு மூன்றுவேளையும் பூஜை செய்தார். பொன்னிவளநாடும் நிலமும் செழிப்படைந்தது.



விரைவில் சோழநாடு மழையின்றி பஞ்சத்தின் பிடியில் சிக்கியது. பயிர் பச்சைகள் அனைத்தும் அழிந்தன. அதனால், சோழமன்னனுடைய பிரியமான பன்னிரெண்டு பசுக்களுக்கும் உண்ண உணவின்றிப் போனது.
ம்மாம்மா
ம்மாம்மா
காவலாளி! எழுதுனரை அழைத்து வா!
எழுதுனரே! நான் சொல்வதை கவனமாக கேட்டு எழுதுங்கள்.
இந்த பசுக்கள் சோழமன்னருக்கு செந்தமானவை. சோழநாட்டில் வறட்சி ஏற்பட்டதால், இவை மிகவும் பசியுடன் இருக்கின்றன. இவைகளை நீங்கள் யாரேனும் பார்த்தால் உணவு கொடுங்கள்.
இதை பன்னிரெண்டு சீட்டில் எழுதி, ஒவ்வொரு பசுவின் கொம்பிலும் கட்டி அவைகளை அவிழ்த்து விடுங்கள்.
சரி மன்னா!
ஜல்ஜல்ஜல்
ஜல்ஜல்ஜல்
போய் வாருங்கள் பசுக்களே! போய் வாருங்கள்!



பசியால் வாடிய பசுக்கள் பொன்னிவளநாட்டில் உள்ள கரும்புக் காட்டைச் சென்றடைந்தன.
அக்கா! நிலத்தின் உரிமையாளர் நாம் உள்ளே புகுந்து சாப்பிடுவதைப் பார்த்தால் அடித்து துரத்தி விடுவார்.
அதனால் நாம் இப்போது அருகிலுள்ள காட்டிற்குள் சென்று ஒழிந்து கொள்வோம். பொழுது சாய்ந்தவுடன் வந்து பசியாறலாம்..
இருட்டும் வரை காட்டில் மறைந்திருந்த பசுக்கள், இருட்டியதும் கரும்புக் காட்டில் புகுந்து பசியாறின.
கருக் கருக்
கருக் கருக்
கருக் கருக்
விடிகாலையில் மீண்டும் அவை காட்டிற்குள் சென்று ஒழிந்து கொண்டன.


கொக்கரக் கோ.கோாா
அடக்கடவுளே!
ஆ! என் கரும்புக்காடு இப்படி ஆயிற்றே! எந்த துஷ்டமிருகம் இதை நாசம் பண்ணியதோ?
காவலாளி நீ சென்று தங்கவள நாட்டு ஆசாரிகளைக் கூட்டிவா!
உடனடியாக வேலி ஒன்றை போட வேண்டும்!
ஆசாரிகளே! பொன்னிவளநாட்டு மன்னர் உங்களை உடனே அழைத்து வரச்சொன்னார்.




ஆசாரிகள் வேலையைத் தொடங்கினர். விரைவிலேயே வேலியை அமைத்தும் விட்டனர்.


நாங்கள் எங்கள் வேலையை முடித்து விட்டோம்!
அரியநாச்சி! ஆசாரிகளின் வேலைக்கு தக்க சன்மானம் கொண்டுவா!







மாலை நேரம் பசுக்கள் பசியுடன் கரும்புக்காட்டை நோக்கி வந்தன. அங்கே வேலி இருந்ததால், அதைத் தாண்ட முயன்ற போது முடியாமல் வேலி மேல் விழுந்து உயிரை இழந்தன.




பசுக்களே! எதற்கு என்னை பார்க்க வந்துள்ளீர்கள்?
இறந்து கைலாயம் சென்ற பசுக்கள் சிவனை சந்தித்தன.
சோழமன்னனின் பசுக்கள் நாங்கள். சோழநாட்டில் ஏற்பட்ட பஞ்சத்தால் பொன்னிவளநாட்டில் உள்ள கரும்புக் காட்டில் பசியாறி வந்தோம். இதையறிந்த அந்த விவசாயி சுற்றிலும் வேலியை அமைத்து விட்டார்.
நாங்களோ மிகவும் பசியாக இருந்தோம், அபபோது வேலியைத் தாண்ட முயன்ற போது வேலி மேல் விழுந்து உயிரை விட்டோம்.
ஓ!!!


சிவன் இதைக்கேட்டு கடுங்கோபம் கொண்டார்.
ஆ! மிகப் பெரும் கொடுமை நடந்துள்ளது உங்களுக்கு.
சித்திரகுப்தா! பூலோக ஏட்டை எடுத்துப்பார் யார் இதை செய்தது என்று?
பொன்னிவள, தங்கவளநாடுகளில் உள்ள ஒன்பது கவுண்டர்களில் மூத்தவரான கோலாத்தா தான் இதை செய்தார்.
..பசுக்களைக் கொன்றதுக்காக நான் கோலாத்தாவை சபிக்கப்போகிறேன்.
ஏழு தலைமுறைக்கும்...
அவன் குடும்பத்தில் குழந்தையே பிறக்கக் கூடாது.






பொன்னிவளநாட்டில் வருடங்கள் பல உருண்டோடிச் சென்றன. கோலத்தாகவுண்டருக்கும் அவர் மனைவிக்கும் இறுதி வரை குழந்தையே பிறக்கவில்லை.







வருடங்கள் கடந்தன. நாடும் செழிப்படைந்தது. ஆனால், அரியநாச்சிக்கு குழந்தையே பிறக்கவில்லை. இதனால் அவள் மிகவும் வருந்தினாள்.


கீ கீ கீ
கீ கீ கீ
கீ கீ கீ
கீ கீ கீ
கோலாத்தா கவுண்டரும் அரியநாச்சியும் அவர்களின் நிலங்களை நினைத்து பெருமையடைந்தனர். ஆனால் அவர்களுக்கோ வயதாகி விட்டது. வம்சம் தழைக்க குழந்தைகள் இல்லை...

# பொன்னிவளாவை பற்றி ஒரு சிறு தொகுப்பு

பொன்னிவளா ஒரு புரதான பண்டை கால கதை. இக்கதை கிராமத்து உடுக்கை பாடகர்களால் இன்றும் ஆடலும், பாடலுமாக சொல்லப்படும் ஒரு பழங்கதையாகும்.

1965 வருடம் கொங்கு நாட்டில் உள்ள மின்வசதி இல்லாத சிறு கிராமத்தில், ஒலி நாடாவை கொண்டு, 18 இரவுகளில் ஒலி பதிவு செய்யப்பட்ட கதையாகும். முதன் முறையாக, கம்யூட்டர் 2D அனிமேஷனில் 26 தொலைக்காட்சி தொடர்களாக ஊருவாக்கப்பட்டு, பல மொழிகளில் பதிவு செய்யப்பட்டது.

ராஜாங்கம் என்பது அதன் மக்களால்தான் கட்டமைக்கப்படுகிறது. உதாரணமாக குடையுன் பரந்து விரிந்த மேல்பகுதி ராஜாங்கம் என்றால், மக்கள்தான் அதனை தாங்கி நிற்கும் கம்பிகள்.

எனவே ஒரு ராஜாங்கத்தைப்பற்றி சொல்லவேண்டும் என்றால், அந்த ராஜாங்கத்தின் மக்களை பற்றியும் சொல்லவேண்டும். அப்போதுதான் அந்த ராஜாங்கத்தைப்பற்றி முழுமையாக புரிந்து கொள்ள முடியும். இக்கதை கொங்கு மக்களின் கதை. இக்கதை தோராயமாக ஆறாம் நூற்றாண்டில் கொங்கு மக்களின் வாழ்க்கை முறையையும், அவர்களின் சமுதாய மற்றும் நாகரீக வாழ்க்கையையும் சித்தரிக்கிறது.



மேலும் பொன்னிவளாவைப்பற்றி விபரம் அறிய பொன்னிவள இணைய தளத்திற்கு செல்லுகள்

www.ponnivala.com/comic1tamil


வாருங்கள்!

# பொன்னிவள

அங்காடிக்கு



சித்திரக்கதை - HD அனிமேஷன் - விளையாட்டு - வாணிக பொருட்கள் - கேளிக்கை - மேலும் பல இலவசங்கள்!







01. காராளர் தோற்றம்
02. அநாதைச்சிறுவன்
03. நாடு கடத்தல்
04. உரிமையுள்ள காதலி
05. அதிசய கல்யாணம்
06. வருத்த விதை
07. ஆயிரம் யாசகர்கள்
08. கொடிய சாபம்
09. உத்தமியின் கோபம்
10. விரக்தியுன் பலன்
11. சாப நிவர்த்தி
12. சொர்க வாசல்
13. விதியின் கணக்கு
14. கோவில் ரகசியம்
15. உண்மை தெரிந்தது
16. நாடு திரும்புதல்
17. மானம் பெரிதென்று
18. சினம் கொண்ட சின்னவர்
19. சுதந்திரம் வென்றது
20. ஆசீர்வதிக்கப்பட்ட வாள்
21. சாம்புகனின் தந்திரம்
22. புதிய சவால்
23. நேருக்கு நேர்
24. எதிரியின் சவால்
25. பெரும் தியாகம்
26. ஒரு சகாப்தம் முடிந்தது

## 26யும் பெற்றுகொள்ள!

ISBN 978-1-927093-42-9
90000 >
9 781927 093429

www.ponnivalamarket.com
மேலும் விபரங்களுக்கு இணைய தளத்திற்கு செல்க:
www.ponnivala.com

© 2012 Ponnivala Publishing